# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 1809 / 2009 / எம்சி. 8 நாள் : 23.2.2009**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - 2009-10ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை சிறப்புக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2009-10ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை சிறப்புக் கூட்டம் வருகின்ற 28.2.2009 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

23/02/09

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## நிதிநிலை அறிக்கை சிறப்புக் கூட்டம்

## (2009-2010)

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல் <br> ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | | 1 |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் | |
| 1 | கோயம்புத்துார் மாநகராட்சி – பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி - 2008-09ம் வருட திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் 2009-10 ம் நிதி ஆண்டிற்கான வரவு, செலவு திட்ட மதிப்பீடு - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்ட வரவு, செலவு அறிக்கை - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. | 2 |

நன்றியுரை

## திருக்குறள்

**இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு.**

(குறள் -385)

## விளக்கம்

**முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.**

திருவள்ளுவர்.

---

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

---

**பொருள் எண் 1**

**பொருள் - கோயம்புத்தூா் மாநகராட்சியின் பொது நிதி, குடிநீா் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதிகளின் 2008-09 ம் வருட திருத்தப்பட்ட மதிப்பீடும் 2009-10 ம் வருடத்திற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடும் மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைத்தல்-தொடா்பாக.**

------------

**கோயம்புத்தூா் மாநகராட்சியின் பொது நிதி, குடிநீா் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதிகளின் 2008-09ம் வருட திருத்தப்பட்ட மதிப்பீடும், 2009-10ம் வருடத்திற்கான வரவு, செலவு திட்ட மதிப்பீடும், ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளவுள்ள பணிகளுக்கான வரவு, செலவு அறிக்கையும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு பரிசீலிக்கப்பட்டு ஒப்புதலுடன் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமா்ப்பிக்கப்படுகிறது. இவ்வாண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவு திட்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.**

**அலுவலகக் குறிப்பு - அங்கீகரிக்கலாம்.** **ந.க.எண் 15930/2008/பி1**

---

**(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்**
**மேயா்**
**கோயம்புத்தூா் மாநகராட்சி**